திருவள்ளுவர் ஆண்டு 2045

ஜுலை - 2015

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 59
பகுதி : 09

விலை ரூ.10/-



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59
பகுதி : 09
ஜுலை : 2015

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 1,000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5,000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

செயலாளர்
**ச.மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பதிப்பாசிரியர்
பேராசிரியர். **இரா.சதாசிவம்**
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.

# பொருளடக்கம்


1. தொல்காப்பிய உரிச்சொல் 4
பேராசிரியர் பெ.சுயம்பு

2. இலக்கியமும் பெண்ணியமும் 13
முனைவர் உ.கருப்பத்தேவன்

3. பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம் 30
முனைவர் மா.செல்வத்தரசி
சென்ற இதழின் தொடர்ச்சி...

4. செந்தமிழ் ஈந்த நந்தா விளக்கு 35
மு.கு.ஜகந்நாத ராஜா

# இதழ் மணம்

இலக்கண இலக்கியங்கள் குறித்த பரப்பும் ஆழமும் நிறைந்த சிந்தனைக்குரிய கட்டுரைகள் படைப்பதில் வல்லவர் பேராசிரியர் பெ.சுயம்பு. அவர்களுடைய தொல்காப்பிய உரிச்சொல் குறித்த கட்டுரை இவ்விதழில் இடம்பெறுகிறது.

நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய பண்டைய இலக்கண நூல்களின் கருத்துக்களைப் பதிவு செய்வதுடன் உரையாசிரியர்கள் இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் உரைகளையும் ஆய்வுநோக்கில் விளக்கியுள்ளார்.

பேராசிரியர் சி.இலக்குவனார் தம் ஆசிரியர் பி.சா.சு அவர்களின் வடமொழி சார்ந்த ஆய்வின் குறைகளைச் சுட்டியதோடல்லாமல் தொல்காப்பியரின் அறிவியல் சூர்ந்த நோக்கை வெளிப்படுத்தி இருப்பதும் அதனைப் பேராசிரியர் பெ.சுயம்பு ஆய்வுநெறி நின்று விளக்கியிருப்பதும் கற்பவர் நெஞ்சம் கொளத்தக்கது. பேராசிரியர் சி.இலக்குவனார் தம் தொல்காப்பிய ஆய்வுநூலை ஆங்கில மொழியில் வெளியிட்ட தன் நோக்கம் தமிழ் தன் இயல்பில் இலக்கண இலக்கியங்களை உடைய உயர்தனிச் செம்மொழி என்பதை உலகில் உள்ள மொழிநூல் அறிஞர்கள் உணரவேண்டும் என்னும் சீரிய நோக்கமாகும். அவரைத் தொடர்ந்து பல்வேறு அறிஞர்களின் தொல்காப்பிய ஆராய்ச்சிப்பார்வை சீர்மையும் கூர்மையும் பெற்றது. பேராசிரியர் சுயம்பு உரிச்சொல் என்ற தலைப்பில் தொல்காப்பியத்தை ஆய்வு செய்திருப்பதைப் போல் இன்னும் பல்வேறு தலைப்புக்களில் தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரை களைச் செந்தமிழில் வெளியிட உள்ளார். மாணவர்களும் ஆசிரியர்களும் உரியமுறையில் அவற்றை எதிர்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

"இலக்கியமும் பெண்ணியமும்" என்ற தலைப்பில் முனைவர் உ.கருப்பத்தேவன் கட்டுரை வரைந்துள்ளார். கட்டுரையில் தமிழ்த் திறனாய்வில் தற்கால விமர்சனப் போக்குக் குறித்து எழுப்பியுள்ள கேள்வி மறுசிந்தனைக்குரியது. விமரிசனங்கள் ஒரு தலைப்போக்காக இல்லாமல் நடுநின்று நன்னெஞ்சை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

முனைவர் உ.கருப்பத்தேவன் பெண்ணியம் குறித்த இலக்கியங்களில் அறத்திற்கு மாறுபட்ட போக்கும் அறத்தின் சிதைவும் சமுதாயச் சீரழிவிற்கும் வித்து என்று குறிப்பிடுவது எழுதுபவர் களுக்கும் வாசகர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாகும்.

# தொல்காப்பிய உரிச்சொல்

பேராசிரியர் **பெ.சுயம்பு**

தொல்காப்பியக் கருத்துக்கள் காலந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதனால் அந்நூலை ஒட்டித் தழுவியும் புதியன சேர்க்கப்பெற்றும் நூல்கள் பல இயற்றப்பெற்றுள்ளன.

தொல்காப்பியச் செய்திகளுள் உரிச்சொல் பற்றிய இலக்கணக் கொள்கை சிக்கல் நிறைந்ததாகவும் அறிஞர்களால் அறுதியான உறுதிக்கருத்தினை வரையறுத்துக் கூற இயலாத தாகவும் கருதப்படுகிறது.

தொல்காப்பியத்தில் உரிச்சொற் கருத்துக்கள், அக்கருத்துக்கள் குறித்த அறிஞர் கருத்துக்கள் எனும் நிலைகளில் இந்த ஆய்வுரை மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

**தொல்காப்பியத்தில் உரிச்சொற் கருத்துக்கள்**

தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் உரிச்சொல் இலக்கணத் திற்காக உரியியல் எனும் தனியோர் இயலை ஒதுக்கி விவரிக்கிறார். இவ்வியலில் 98 நூற்பாக்களில் இவ்விலக்கணம் பேசப்படுகிறது. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் எனும் ஏனைய மூன்று வகைச் சொற்களுக்கும் தனித்தனியே பெயரியல், வினையி யல், இடையியல் என ஒவ்வோர் இயல் ஒதுக்கப்பட்டிருத்தலைப் போன்றது இவ்வியல் ஒதுக்கீடு. உரியியல் தவிர, குற்றியலுகரப் புணரியல், பெயரியல், எச்சவியல் ஆகிய பிற இயல்களிலும் உரிச் சொல் இலக்கணக் குறிப்புக்கள் சில இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பிய உரியியல் உரிச்சொல்லின் வரைவிலக்கணம், எடுத்துக்காட்டு, புறனடை எனும் முறையில் அமைக்கப் பெற்றுள்ளது. புறனடைச் செய்திகளும் பிற இயல்களில் உள்ள குறிப்புக்களும் வரைவிலக்கணத்திற்குக் கூடுதல் செய்திகளாகக் காணப்படுகின்றன.

**உரிச்சொற் கிளவி விரிக்கும் காலை**
**இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்**
**பெயரினும் வினையினும் மெய்தடு மாறி**

ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்.

(தொல்.சொல்.297)

இஃது உரிச்சொல் வரைவிலக்கணத்தை விரித்துக் கூறுகிற உரியியலின் முதல் நூற்பா. இந்நூற்பா உரிச்சொல் இலக்கணத்தை ஒன்றன்பின் மற்றொன்றாக வரிசைப்படுத்திக் கூறுகிறது.

உரிச்சொல் இலக்கணத்தைத் தொகுத்து விரிக்கிற நூற்பாவைத் தொடர்ந்து,

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

(தொல்.சொல்.298)

எனும் நூற்பா இடம்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து எண்பத்தொன்பது நூற்பாக்கள் நூற்றிருபது உரிச்சொற்களுக்குப் பொருளைக் கூறுகின்றன.

பொருள் உரைக்கும் நூற்பாக்களைத் தொடர்ந்து எட்டு நூற்பாக்களில் உரிச்சொல்லின் பொருண்மை பற்றிய குறிப்புக்கள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே.

(தொல்.சொல்.389)

கூறிய கிளவிப் பொருள்நிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றொடு கொளலே.

(தொல்.சொல்.390)

பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம் பின்றே.

(தொல்.சொல்.391)

பொருட்குத் திரிபு இல்லை உணர்த்த வல்லின்.

(தொல்.சொல்.392)

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.

(தொல்.சொல்.393)

மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா.

(தொல்.சொல்.394)

எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே.

(தொல்.சொல்.395)

அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வருஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்
வரம்பு தமக்கு இன்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையின் கிளந்தவற் றியலான்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர். (தொல்.சொல்.396)

இந்நூற்பாக்கள் உரிச்சொல்லுக்கான பொருளின் வரலாறு (திறம்), அதனை அறியும் முறை, உரிச்சொற்களின் வரம்பற்ற எண்ணிக்கை ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன.

உரியியலில் விரித்துக் கூறப்பெற்ற உரிச்சொல் இலக்கணம் தவிர, குற்றியலுகரப் புணரியலின் இறுதியில் எழுத்ததிகாரப் புறனடையாக உள்ள நூற்பாவிலும் உரிச்சொல் பற்றிய சிறுகுறிப்பு இடம்பெற்றுள்ளது.

உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்
செய்யும் செய்த என்னும் கிளவியும்
மெய்யொருங் கியலும் தொழில்தொகு கிளவியும்
தம்மியல் கிளப்பின் தம்முன்தாம் உருஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்

அன்னவை எல்லாம் மருவின் பாத்திய
புணரியல் மருங்கின் உணரத் தோன்றா.

(தொல்.எழுத்.482)

இப்புறனடை நூற்பா புணர்ச்சி இலக்கணத்திற்குப் புறனடையாக விவரிக்கப்பெற்றுள்ளது.

பெயரியலில் சொல்லின் வகைகளைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர் உரிச்சொல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே. (தொல்.சொல்.158)
இடைச்சொற் கிளவியும் உரிச்சொற்கிளவியும்
அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப.

(தொல்.சொல்.159)

தொல்காப்பியர் உரிச்சொல்லை ஓர்வகைச் சொல்லாக இங்கு அறிவிக்கிறார்.

எஞ்சிய இலக்கணங்களைத் தொகுத்துக் கூறும் எச்சவியலில்,

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.

(தொல்.சொல்.455)

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய.

(தொல்.சொல்.456)

என்று உரிச்சொற்களுள் சில பெயர், வினைகளைச் சார்ந்து அவற்றின் பொருளை வேறுபடுக்கும் எனும் செய்தியும் காணப்படுகிறது.

தொல்காப்பிய நூற்பாக்களிலிருந்து உரிச்சொல் பற்றிய தொல்காப்பியரின் பின்வரும் வரைவிலக்கணத்தை அறிய முடிகிறது.

1. உரிச்சொல் தமிழ்ச் சொல்வகைகளுள் ஒன்று.
2. இச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் இரண்டிலிருந்து தோன்றும்.
3. பெயர், வினை ஆகிய சொற்களைச் சார்ந்து வரும்.
4. ஓசை; மனக்குறிப்பு; நிறம், வடிவம், சுவை முதலிய பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

5. பெயர்ச்சொல் போன்றும் வினைச்சொல் போன்றும் வடிவம் உடையது.
6. பலபொருள்களை உணர்த்துகிற ஒரு சொல்லாக வரும்.
7. ஒரு பொருளை உணர்த்துகிற பல சொற்களாக வரும்.
8. வழக்கில் பயிலப்படாது, அருகிய வழக்குடைய சொற்களுக்கு உரிய பொருளை வழக்கில் பயின்று வருகிற பழகு சொற்களின் உதவியால் உணர்த்தல் வேண்டும்.
9. உரிச்சொல் வெளிப்படப் பொருள் அறியும் சொற்கள், வெளிப்படப் பொருள் அறியமுடியாச் சொற்கள் என இரு வகைப்படும்.
10. ஓர் உரிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் வருகிற அண்மைச் சொற்களின் பொருளை ஆராய்ந்து, பொருண்மைச் சூழலுக்கு ஒப்புமை உடைய சொற்களைச் சேர்த்துக் கூறினால், அந்த உரிச்சொல்லுக்கான மரபுசார்ந்த செம்பொருள் அறியவரும்.
11. ஓர் உரிச்சொல்லுக்கு உரிய பொருளை உணர்ந்த பின்னர் மீண்டும் மீண்டும் பொருளை ஆராயின், அது வரம்பில் லாதது ஆகிவிடும்.
12. சொல்லின் பொருண்மைத் திறனை அறிந்தோர் உணர்த்து மிடத்து, சொல்லின் பொருள் மயக்கம் (குழப்பம்) உண்டா காது.
13. எத்துணைச் சொல்லாற்றல் உடையோர் பொருளை உணர்த்தினாலும், அதனை உணர்ந்து கொள்வோரின் உணர்வுத் திறனுக்கு ஏற்பவே பொருண்மை புலப்பாடு அமையும்.
14. ஒரு சொல்லுக்கு உரிய பொருள் அமைந்ததற்கான காரணத்தை ஆராயின், அக்காரணம் அறுதியாக வெளிப்படாது.

உரிச்சொற்கள் பல்வேறு முறைகளால் தோன்றுவன; ஆதலின் அவற்றின் தொகை வரம்பின்றிப் பெரிதாகும். எனவே இவ்வுரியியலில் பொருள் வெளிப்படையாக அறிய இயலாத அருஞ் சொற்களுள் சிலவற்றுக்கு மட்டுமே பொருள் எடுத்துக் கூறப் பெற்றுள்ளது. ஏனைய சொற்களுக்கான பொருளை அறிந்து

கொள்ளுதல் புலவர்களின் திறனாகும். இவ்வாறு தொல்காப்பியர் உரிச்சொற்களின் வரம்பற்ற தொகையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**உரையாசிரியர்களின் கருத்துக்கள்**

தொல்காப்பிய உரையாசிரியர்கள் உரிச்சொல் பற்றி வெவ்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியர் குறைச்சொல் என்று குறிப்பிடுவதை உரிச்சொல் என்று உரைக்கின்றனர்.

> "உயிரெழுத்தும் புள்ளியெழுத்தும் ஈறாகிக் குறிப்பின் கண்ணும் பண்பின் கண்ணும் இசையின் கண்ணும் தோன்றி ஒரு நெறிப்பட வாராக் குறைச்சொற்களாகிய உரிச்சொற்களும்" (இளம்பூரணர்)
>
> "குறிப்பினானும் பண்பினானு மிசையினானும் பிறந்து, ஒரு வழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய வுரிச் சொற்களும்" (நச்சினார்க்கினியர்)

இளம்பூரணர் உரியியலின் முதல் நூற்பாவிற்கு விளக்கம் எழுதுமிடத்து,

> உரிச்சொற்கள் தோன்றுமிடத்து இசையும் குறிப்பும் பண்பும் பற்றிப் பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் சென்று பொருள்களை விளக்கும் என்றவாறு; மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினை பற்றியும் வரும் வரவினை நோக்கி; அவ்வாறு தடுமாறுங்கால் ஒரு சொல் பல பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும், பல சொல் ஒரு பொருட்கு உரிமைப்பட்டுத் தடுமாறுதலும் உடைய. அவை அவ்வாறு தடுமாறித் தோன்றுதல் அவற்றிற்கு இலக்கணம். அவ்வாறு தோன்றுங் கால் பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற உரிச்சொல்லோடு சார்த்தி உணரப்படும். அவ்வாறு சார்த்திச் சொல்லவே எவ்வகைப்பட்ட சொல்லாயினும் பொருள் விளங்கும். (தொல்.சொல்.292)

என்று குறிப்பிடுகிறார். மேலும், உரிச்சொற்கள் இடைச் சொற்களை விட வழக்குப் பயிற்சி குறைந்தவை எனும் கருத்தையும் பெயரியலில் இவர் உணர்த்துகிறார்.

"வழக்குப் பயிற்சி நோக்கி இடைச்சொல் முற்கூறினார்"
(தொல்.சொல்.156)

சேனாவரையர் பின்வரும் கருத்தை உரைக்கிறார்.

தமக்கியுல்பில்லா இடைச்சொற் போலாது இசைகுறிப்புப் பண்பென்னும் பொருட்குத் தாமே யுரியவாதலின், உரிச் சொல்லாயிற்று. பெரும்பான்மையும் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்செர்ல் லாயிற்றென்பாருமுளர்.

> உரிச்சொற்கு இலக்கணமாவது இசைகுறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம் (தொல்.சொல்.297)

நச்சினார்க்கினியர் விளக்கம் வெளிப்படையாகக் காணப்படு கிறது. உரியியலின் முதல் நூற்பாவிற்கு உரை எழுதுமிடத்து,

> இது தமக்கியல்பில்லா விடைச்சொற் போலாது, இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லோத்தென்னும் பெயர்த்தாயிற்று. ஈறுபற்றிப் பலபொருள் விளக்கலுமுருபேற்றலு மின்றிப் பெயரையும் வினையையுஞ் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலி, னுரிச்சொற் பெயரின் வேறென்றுணர்க"

என்று விளக்கம் தருகிறார்.

தெய்வச்சிலையார் வடமொழி இலக்கணத்தை ஒப்பிட்டு உரிச்சொல்லை விளக்குகிறார்.

உரிச்சொல் என்பது யாதோ எனின், ஒரு வாய்பாட்டாற் சொல்லப்படும் பொருட்குத் தானும் உரித்தாகி வருவது. அதனானே யன்றே ஒருசொற் பலபொருட்குரிமை தோன்றினும், பலசொல் ஒருபொருட்குரிமை தோன்றினும் என ஓதுவாராயினர். எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச்சொற் கிளவி என்று ஓதினமை யால், வடநூலாசிரியர் தாது என்று குறியிட்ட சொற்களே இவை யென்று கொள்ளப்படும். அவையும் குறைச் சொல்லாதலான். அஃதேல், தொழிற் பொருண்மை உணர்த்துவன எல்லாம் இதனுள் ஓதினாரோ எனின், வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொல் மேன (சூ-2) என்றாராகலின், வழக்கின் கட் பயிற்சி இல்லாத சொற்கள் ஈண்டு எடுத்து ஓதப்படு

கின்றன என்க... பொருள்படு வழிச் சொல்லானும், குறிப்பானும், குணத்தானும் பொருள்படுஉம் என்பதூஉம், ஈண்டுக் கூறப் படுகின்ற உரிச்சொல் இம்மூவகையானும் பொருள் வேறுபடும் என்பதூஉம் கூறியவாறாம். 'பெயரினும் வினையினும் மெய்தடுமாறி' என்பது உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறி எ-று. அவை தடுமாறுங் கால் பெயர் வினைகளைச் சார்ந்தும், அவற்றிற்கு அங்கமாகியும் வரும். 'உறுவளி' என்பது பெயரைச் சார்ந்து வந்தது. 'உறுவன்' என்றவழிப் பெயர்க்கு அங்கமாயிற்று. 'உற்றான்' என்றவழி வினைக்கு அங்கமாயிற்று (தொல்.சொல்.292).

**பிற இலக்கண நூல்களின் கருத்துக்கள்**

தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண நூல்கள் பல இந்நாளில் வழக்கில் உள்ளன. இந்நூல்கள் தெளிவாகப் புலப்படாத தொல்காப்பிய இலக்கண விதிகள் பலவற்றை எளிதாக விளக்கும் நோக்கில் எழுதப்பெற்றுள்ளன என்ற கருத்து நிலவுகிறது. நூல்கள் சில அளவில் சிறிதாக உள்ளன. வேறு சில பெரிதாக உள்ளன. எவ்வாறாயினும் இவற்றின் கருத்துக்கள் தொல்காப்பிய இலக்கணத்தைத் திறனாய்வு செய்வன வாக அமைக்கப்பெற்றுள்ளன.

ஓண்பேர் வினையோடும் தோன்றி உரிச்சொலிசை
பண்பு குறிப்பால் பரந்தியலும் – எண்சேர்
பலசொல் ஒருபொருட் கேற்றுமொரு சொற்றான்
பலபொருட் கேற்றவும் பட்டு. (80)

நேமிநாதம் தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ள உரிச் சொற்களுள் சிலவற்றுக்குப் பொருள் கூறுகிறது. இந்நூலின் உரிச்சொல் இலக்கணம் ஐந்து நூற்பாக்களுள் செறிக்கப் பெற்றுள்ளது.

நன்னூலின் கருத்துக்களுள் பின்வரும் நூற்பாக்கள் உரிச் சொல்லின் இலக்கணத்தை வரையறுத்தற்குப் பயன்படும்.

இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர்வினை
எனஇரண் டாகும் இடைஉரி அடுத்து
நான்குமாம் திசைவட சொல்அணு காவழி (270)

பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல் (442)

இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்று இசைநூலுள் குணிகுணப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே (460)

உரிச்சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறி, தொடர்ந்து அறிவின் அடிப்படையிலான ஐவகை உயிர்களை விவரிக்கிறது. பின்னர் உயிர்ப்பொருள், உயிரல் பொருள்களுக்கான அறிவு, அருள், வெறுப்பு முதலிய குணப் பண்புகளையும் துய்த்தல், துஞ்சல், தோன்றல், மறைதல் ஆகிய தொழிற் பண்புகளையும் பட்டியலிடுகிறது.

தொல்காப்பியம் பொருள் என்று கூறியதை நன்னூல் குணம் என்று குறிப்பிடுகிறது.

நன்னூலின் உரிச்சொல் இலக்கணத்துள் 'பல்வகைப் பண்பும் பகர் பெயராகி' என்பதும் 'செய்யுட்கு உரியன' என்பதும் அறுதியிட்டுக் கூறப்பெற்ற வரைவிலக்கணம் ஆகும்.

செய்யுளில் எடுத்தாளப்பெறுகிற பொருள் அறிதற்கு அரியனவாகிய பெயர்ச்சொற்களே உரிச்சொற்கள் என்பதும் அவை பெயர் வினைகளைச் சார்ந்து வரும் என்பதும் நன்னூலின் உரிச்சொல் வரைவிலக்கணம் எனலாம். உரியியலைப் பிங்கலந்தை முதலிய அகராதிகளுக்கு இணையானது என்று கருதுதலிலிருந்து பொருள் அறிதற்கு அரிய சொற்கள் என்பதை அறிய முடிகிறது. உரையிலும் செய்யுளிலும் பயின்று வருகிற பழகுதமிழ்ப் பெயர்ச்சொற்களை உரிச்சொற்கள் என்று நன்னூல் ஏற்கவில்லை.

'தொல்காப்பிய இலக்கணக் கருத்துக்களை விளக்குவன வாகக் கருதி எழுதப்பெற்ற உரைகளும் இலக்கண நூல்களும் மாறாகத் தொல்காப்பியக் கருத்துக்களைத் தவறாகத் திரித்து விவரித்து இருளாக்கி உள்ளன. எனவே அந்த இருளைப் போக்கி,

உண்மைக் கருத்துக்களைப் புலப்படுத்துகிற இலக்கணவிளக்கு' என்று கூறிக்கொள்ளுகிற இலக்கண விளக்கம் தொல்காப்பிய உரியியல் விதிகளை விடுதலின்றி விரிவாகக் கூறுகிறது.

குறிப்பும் பண்பும் இசையும் தோற்றிப்
பெயரும் வினையும் போன்றவை இரண்டற்கும்
அடியுமாகிய அவற்றேற் புழிநின்
றொருபொருட் குரிமையும் பலபொருட் குரிமையும்
உடைய வாகி யுணரா தவற்றை
உணர்ந்தவை சார்த்தி உணர்வன உரிச்சொல்
அவைதாம் எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்
(280)

உரிச்சொல் பெயர்ச்சொல் போன்றும் வினைச்சொல் போன்றும் வடிவம் உடையது. அது பெயர்ச்சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் அடிச்சொல்லாக அமைவது. இஃது இலக்கண விளக்கத்தின் செய்திகளுள் குறிக்கத்தக்கது. வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தில்,

உரிச்சொல் என்ப உரிய பற்குணசொல்
ஆகிப் பெயர்வினை அணைந்து வருமே. (138)

என்று கூறுகிறார். மேலும், தமது செந்தமிழ் இலக்கணம், கிலாவிஸ் ஆகிய நூல்களில் பெயரடை (adjective) என்று குறிப்பிடுகிறார்.

முத்துவீரியம் (669) தொல்காப்பியம் கூறுகிற உரிச்சொல் பொது இலக்கண நூற்பாவை எடுத்து மொழிவதோடு, உரிச்சொற் களுக்கும் பொருளைத் தருகிறது.

சுவாமிநாதம் உரிச்சொல் இலக்கணத்தை ஒரே நூற்பாவில் கூறி அமைகிறது.

பண்பான வடிவுஅளவு நிறம்காட்சி கருத்தாய்ப்
பகர்உரித்தாய்ப் பெயர்வினை போன்றவைக் கடியாய் முன்பின்
எண்பா லினின்று உணரா உணர்த்தி உணர்த்தலிற் சார்ந்
தொருசொல் பலபொருட் பலசொல் ஒருபொருளும்
உரிச்சொல்

எண்பாவின இருபாலும் இணங்கிட விகாரத்
தியன்று பொருள் அமைவு செயும் பிறிது எனினும் பொருளா
நண்பன்மை யுறும் பொருட்குப் பொருள் தெரியின் மிகவாம்
நன்மதுரம் கொழித்திருக்கு நயப்பிடை வாய்த்திடுமே (57)

உரிச்சொல் பண்புப் பொருளை உரியது (உணர்த்துவது); பெயர்ச்சொல்லைப் போன்றும் வினைச்சொல்லைப் போன்றும் வடிவம் உடையது; பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் அடிச்சொல்லாக அமைவது. சுவாமிநாதத்தின் உரிச்சொல் இலக்கணம் இது.

பிற்கால இலக்கணநூல்கள் உரிச்சொல்லைப் பெயர், வினை, இடை, உரி என நால்வகைச் சொற்களுள் ஒன்றாகக் கருது கின்றன. பெயர், வினைச்சொற்களுக்கு அமைத்திருப்பதைப் போன்று தனிஇயலை நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம் முதலியன ஒதுக்கியுள்ளன. ஆனால் முத்துவீரியமும் சுவாமிநாதமும் தனிஇயல் அமைக்காமல் முறையே ஒழிபியலிலும் எச்சமரபிலும் இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் அடக்கி யுள்ளன.

**இக்கால மொழியறிஞர்களின் கருத்துக்கள்**

இளம்பூரணர் முதலிய முந்தைய பழைய உரையாசிரியர் களின் கருத்தை ஆய்வு செய்தபின்னர், பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் தமது கருத்தை விவரிக்கிறார்.

"இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணங் கூறியதாயின் 'உரிச்சொற்கிளவி - இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றும்' என்றே ஆசிரியர் கூறியிருப்பர். ஏனையவற்றைச் சேர்த் திருத்தலால் இச்சூத்திரம் உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறாது அதன் தன்மையைக் கூறிற்று என்றலே பொருந்தும். அவ்வாறாயின் அதன் இலக்கணம் எதனாற்பெறுதுமெனின், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் இவற்றின் இலக்கணம் அவ்வக்குறியாற் பெறப்பட்டன என்றதுபோலவே, உரிச்சொல் என்ற தொல்லோர் குறியானே அது பெறப்பட்டதெனல் வேண்டும். உரிச்சொல் என்பதற்குப் பெயரினும், வினையினும் இன்றியமையாதுரிய பகுதியை யுணர்த்தும் கிளவி என்பது பொருளாகும். அப்பகுதியைத் தெய்வச்சிலையார் தாது என்பர்.

அவரது கொள்கையில் வடமொழியிலக்கணவாசிரியரான சாகடாயனரைப் போல் எல்லாப்பெயரும் தாதுவிலிருந்து வந்தன என்று கொள்ளல் வேண்டும். செயலைக்குறிக்கும் பகுதிகளுக்கே தாது எனப் பெயராதலானும், மழவு குழவு முதலிய சில பெயர்கள் தாதுவிலிருந்து பெறப்பட்டன என்று கொள்ளுவது எளிதன்றா கலானும், எல்லாப் பெயர்களும் தாதுவிலிருந்து பிறந்தன எனக் கொள்ளாது பெரும்பான்மையன தாதுவிலிருந்தும், சிறுபான்மையன அவ்வாறன்றியும் பிறந்தன என்று வடமொழியிலக் கணவாசிரியரான கார்க்கியரைப்போல் கொள்ளுவது பொருத்த மாகும். அவ்வாறாயின் சில பெயர்களின் பகுதியும் உரிச்சொல் என்னலாமென்பது என் கருத்து. ஆதலின் உரிச்சொல் என்பது பெயர், வினை இவற்றின் பகுதி எனலாம்" (தொல்.சொல்.297).

சாஸ்திரியாரின் வடமொழி ஒப்பீட்டை ஏற்காத சி.இலக்குவனார் மேலைநாட்டு மொழியியல் அறிஞர்களின் கருத்தை ஒட்டி உரிச்சொல்லுக்கு விளக்கம் தருகிறார்.

"உரிச்சொல் (வேர்ச்சொல்), இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுள் ஒன்றின் அடிப்படையில் தோன்றும். தொடக்க நிலையில் பெயராகவும் பயன்படுத்தலாம்; வினையாகவும் பயன் படுத்தலாம். 'கழி' என்பது கழித்தல் என்ற பெயரையும், கழிந்தான் என்ற வினையையும் தோற்றுவிக்கும்" (பக்.109)

"மேலைநாட்டு மொழி நூலறிஞர்கள் 'Semantics and morphemes' என்னும் தலைப்பில் ஆராய்கின்றவற்றை ஆசிரியர் தொல்காப்பியனார் உரிச்சொல் இடைச்சொல் என்ற தலைப்புக்களில் ஆராய்கின்றார்" (பக்.113).

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், கமில்சுவலபில் போன்ற அறிஞர்களும் இலக்குவனாரைப் போன்று, உரிச்சொல்லை அகராதிப் பொருளை உணர்த்துகிற வேர்ச்சொல் என்று கூறுகின்றனர்.

செ.வை.சண்முகம், "உரியியல் முழுமையும் மொழி அமைப்பியல் - சிறப்பாகச் சொல்லியல் நோக்கில் பார்க்கும்போது 'தாது' என்ற கருத்து ஓரளவு பொருந்துவதாகவே தோன்றுகிறது. ஆனால் உரியியலில் பெரும்பான்மையும் சொற்களுக்குப் பொருள்

கூறியுள்ளதால் அவற்றை அதிகபட்சம் அகராதியன் (lexeme) அதாவது அகராதியில் பொருள் கொடுக்கக்கூடிய சொற்கள் என்று வேண்டுமானாலும் கொள்ளலாம்" (ப.176) என்று குறிப்பிடுகிறார். அவருக்கு உரிச்சொல் அடிச்சொல் (பகுதி) அல்லது வேர்ச் சொல்லாகவும் தொல்காப்பியரின் உரியியல் ஓர் அகராதியாகவும் தெரிகின்றன.

செ.வை.சண்முகம் பிறிதொரு கருத்தையும் பதிவு செய்துள்ளார்.

"சொல்லதிகாரம் முழுமையும் பார்க்கும்போது உரியிய லிடையே இன்னொரு முகமும் புலனாகின்றது. அதாவது பெயரியலில் உரிச்சொல்லைத் தனிச்சொல்வகையாகக் கூறியதற்கு ஏற்பவும், எச்சவியலில் உரிச்சொற்கள் அடையாக வரும் என்று சொன்னதற்கு ஏற்பவும், உரியியலில் வெளிப்பட வராத சொற்களுக்குப் பொருள் கூறும்போது பெயர், வினைகளோடு அடையாக மட்டும் வரும் சில சொற்களையும் சேர்த்துப் பொருள் கூறியதன் மூலம் உரியியல் சொல்லிலக்கண நோக்கில் புதியதொரு சொல்வகை இருப்பதை உறுதிப்படுத்துகிறது." (ப.177)

இங்குச் செ.வை.சண்முகம் உரிச்சொற்களை அடை மொழிகள் என்று கருதுகிறார்.

ச.வே.சுப்பிரமணியன், "அடிச்சொற்கள் பற்றிக் கூறும் பகுதி. அகராதியின் தோற்றத்திற்கு விதை இந்த நூல்" என்று குறிப்பிடுகிறார்.

உரியியல் அருஞ்சொற்களுக்குப் பொருள் உரைக்கின்ற ஓர் அகராதி (நிகண்டு) என்பது நன்னூல் முதலிய மரபிலக்கண அறிஞர்களுக்கும் மோ.இசரயேல், செ.வை.சண்முகம் உள்ளிட்ட மொழியறிஞர்களுக்கும் ஒப்ப முடிவான கருத்தாகும். ஆனால் உரிச்சொல்லின் வரைவிலக்கணத்தை அறிவதில் அறிஞர்களுக்கு இடையே மயக்கம் தொடர்கிறது.

"உரிச்சொல் கருத்தாழம் மிகுந்த ஒரு இயல் என்பதும் அதில் பலவிதக் கருத்துக்கள் புதைந்துள்ளன என்பதும் சிறப்பாக உணரத் தகுந்தன (செ.வை. சண்முகம்).

**தொகுப்பு**

தொல்காபபிய உரையாசிரியர்கள் பலர் பொருளுக்கு உரிமை உடையது உரிச்சொல், அது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் அடிச்சொல்லாக அமையும் என்று கூறுகின்றனர். மேலும், பெயர், வினைச்சொற்களுக்கு அடைமொழியாக உரிச்சொல் வருதலையும் குறிப்பிடுகின்றனர்.

நன்னூல் உரிச்சொல் செய்யுளில் வழங்குதற்கு உரியது; பல்வேறு பண்பு உணர்த்தும் பெயர் வடிவம் உடையது; பெயர்ச் சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் அடைமொழியாக வரும் என்று கூறுகிறது. நச்சினார்க்கினியரும் பால்விகுதி, வேற்றுமை உருபுகளை ஏற்காத ஒருவகைப் பெயரே உரிச்சொல் என்று கூறுகிறார். நிகண்டுகளில் பெயர் வடிவங்களே மிகுதியாக இடம் பெற்றுள்ளன.

உரிச்சொல் பெயர், வினைச்சொற்களின் வடிவம் உடையது; பெயர், வினைச் சொற்களுக்கு அடிச்சொல்லாக அமைவது. இவ்வாறு இலக்கண விளக்கமும் சுவாமிநாதமும் உரிச்சொல்லை விளக்குகின்றன.

வீரமாமுனிவர் உரிச்சொல்லைப் பெயரடை என்று கூறுகிறார்.

இக்கால மொழியறிஞர்கள் பலர் வேர்ச்சொற்களே உரிச் சொற்கள் என்று கருதுகின்றனர். வேறு சிலர் அடைமொழிகள் என்று கூறுகின்றனர்.

தொல்காப்பயிர் ஒரு செய்யுளின் மையக்கருத்தினை உரி என்று பொருளதிகாரத்தில் கூறுகிறார். ஒரு செய்யுளுக்கு முதன்மையாக உரிமை உடையது அதன் மையக் கருத்தாகும். அவ்வாறு ஒரு சொல்லின் மையப் பொருளே அகராதிகளில் விளக்கப்படுகிற அகராதிப் பொருளாகும். அகராதிப் பொருளை உணர்த்துவதனால் உரிச்சொல்லை அடிச்சொல், பகுதி, தாது, வேர்ச்சொல் என்றெல்லாம் இலக்கண அறிஞர்களும் மொழியியல் அறிஞர்களும் கூறுகின்றனர்.

உரிச்சொற்களுள் சில பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்து அவற்றுக்கு அடைமொழியாகி அவற்றின்

பொருளைச் சிறப்பிக்கின்றன. இத்தகைய உரிச்சொற்களைத் தொல்காபபியர் வேற்றுமைச் சொல் என்று குறிப்பிடுகிறார். இதனாலேயே உரையாசிரியர்களும் பிற்கால அறிஞர்களும் உரிச் சொல்லை அடைமொழி என்று கூறுகின்றனர். நன்னூலாரும் வீரமா முனிவரும் அடைமொழி எனும் கொள்கைக்கு வலுவூட்டினர். இக்கால வழக்கில் பெயருரிச்சொல், வினையுரிச்சொல் எனும் சொல்லாட்சி நிலைத்துவிட்டது.

உரிச்சொல் அடிச்சொல். ஆதலின் அது பால் விகுதிகளை ஏற்று வருகிற பெயர், வினைச்சொற்களைப் போன்ற முழுச் சொல்லன்று.

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே**

என்று பால் விகுதிகளை ஏற்றலைச் சொல்லின் தகுதியாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். எனவே பால் விகுதியைப் பெறாத உரிச்சொல்லைக் குறைச்சொல் எனக் கூறுகிறார்.

சொல்லின் தகுதிகள் யாவற்றையும் உடைய பெயர், வினை இரண்டுமே முழுச்சொற்கள் என்று கொண்டதாலேயே,

**சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே**

என்று மொழியறிஞர்களை மேற்கோள் காட்டித் தொல்காப்பியர் பேசுகிறார்.

பெயர், வினை இரண்டற்கும் அகராதிப்பொருள் தரும் அடிச் சொல்லாக உரிச்சொல்லும் இலக்கணப் பொருள் தரும் பின்னொட் டுக்களாக (விகுதிகளாக) இடைச்சொல்லும் உள்ளன. எனவே சொல்லின் அமைப்பு உறுப்புக்களாகிய இரண்டனையும் இடை யியல், உரியியல் என வெவ்வேறு இயல்களில் தொல்காப்பியர் விவரிக்கிறார். மேலும், ஏற்கனவே பிற இயல்களில் இணைத்து விவரித்த வேற்றுமை உருபுகள், சாரியைகள், பால் எண் விகுதிகள், உவமை உருபு முதலியவற்றை இடையியல் விவரிக்கவில்லை. ஒழிக்கப்பெற்றவை மட்டுமே இந்த இயலில் இடம்பெற்றுள்ளன.

உரிச்சொல் அடிச்சொல்; அதன் எண்ணிக்கை பரந்தது.

உரிச்சொற்கள் யாவற்றுக்கும் உரியியல் பொருள் கூறுவது தேவையற்றது. புழக்கத்திலுள்ள சொற்கள் எளிதில் பொருள் உணர்ந்து கொள்ளத்தக்கது. இதனால் வழக்கில் பயிற்சி இல்லாத சொற்கள் சிலவற்றைத் தொகுத்துத் தொல்காப்பியர் பொருள் கூறுகிறார். மேலும், அரிய சொல் மட்டுமன்றி, அரிய பொருளையும் தொல் காப்பியர் சுட்டிக்காட்டுகிறார்.

பல பொருள்களை உணர்த்தும் ஒருசொல், ஒருபொருளை உணர்த்தும் பலசொற்கள் மட்டுமே உரியியலில் கூறப்படுகின்றன என்பது தொல்காப்பிய விதி (நிகண்டுகளின் அமைப்பு). ஆனால் புரை, சேர், மாலை, அரி, மாதர்எனப் பலசொற்களுக்கு ஒரு பொருள் மட்டுமே கூறப்பெற்றுள்ளது. இவற்றுக்கு வேறு பொருள் களும் உள்ளன. இங்குக் கூறப்பெற்ற பொருள் பேச்சுவழக்கில் இல்லாத அரியபொருளாகும்.

தொல்காப்பியர் செய்யுளியலின் இறுதியில் செய்யுளுக் காகவே இலக்கணம் எழுதப்படுதலைத் தெரிவிக்கிறார். அகத்தியம், நன்னூல், இலக்கணவிளக்கம் போன்ற பிற மரபிலக்கண நூல்களும் இதனையே தெரிவிக்கின்றன. எழுத்து, சொல், பொருள் இலக்கணங்களைத் தொல்காப்பியர் விவரிக்கிற முறையும் இதனை அரண் செய்கின்றன.

செய்யுளை உணர்ந்து கொள்ளுதற்கு அதன் சொற் பொருளை அறிதல் தலையாயது. எனவே அரிய சொற்களுக்கான அரும்பொருள்களை எடுத்துரைக்கிற நிகண்டு அல்லது அகராதி மிகவும் இன்றியமையாதது. இதனாலேயே தொல்காப்பியர் உரியியலை ஓர் அகராதி எனும் அமைப்பில் படைத்துள்ளார்.

உரியியல் தொல்காப்பியம் எனும் இலக்கண நூலின் அமைப்பினை முழுமை ஆக்கியுளது.

**துணை நூல்கள் சில**

1. தொல்காப்பிய உரைகள்
2. தமிழ் இலக்கண நூல்கள்
3. தமிழ்மொழி வரலாறு (தெ.பொ.மீனாட்சிசுந்தரம்)
4. இடையும் உரியும் (மோ.இசரயேல்)
5. தொல்காப்பிய ஆராய்ச்சி (சி.இலக்குவனார்)

6. சொல்லிலக்கணக் கோட்பாடு (சொ.வை.சண்முகம்)
7. தமிழ் இலக்கண நூல்கள் (ச.வே.சுப்பிரமணியன்)
8. தொல்காப்பியம் உரிச்சொல் விளக்கம் (அ.கு.ஆதித்தர்)
9. தொல்காப்பியம் சொல்லதிகாரக் குறிப்பு
(பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரி)
10. இலக்கண நூற்களஞ்சியம் (பெ.சுயம்பு)
11. இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி (பெ.சுயம்பு)

# இலக்கியமும் பெண்ணியமும்

**முனைவர் உ.கருப்பத்தேவன்,**
உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

'இலக்கியத் திறனாய்வு' என்னும் பெயரில் மேலைநாட்டு ஆங்கில இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கூடுதல் அளவுகோலாகவும் மதிப்பீட்டுக் கொள்கையாகவும் வைத்துக்கொண்டு இலக்கிய வாசகர்களை அச்சுறுத்துவது தமிழ்த் திறனாய்வில் தற்காலப் போக்காக் காணப்படுகின்றது.

இவ்வாறு தமிழ் இலக்கியத் திறனாய்வைச் சொந்த மண்ணின் மரபிலிருந்தும் சூழலிலிருந்தும் அந்நியப்படுத்துவது செயற்கையானதாகும். தமிழ்மொழி மற்றும் தமிழினத்தின் தனித்தன்மை மிக்க சில மரபுகளும் மதிப்பீடுகளும் இருக்கின்றன. தமிழ் மண்ணின் உண்மையான உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட எந்தப் புதிய இலக்கிய இயக்கமும் தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் வலுவைச் சேர்க்காது. இலக்கிய இயக்கங்கள் எத்தகைய ஆழமான தத்துவக் கோட்பாடுகளில் வேரூன்றிய போதிலும், அவை கருத்து வெளிப்பாட்டிற்காகவே முன்வைக்கப் படுகின்றன.

இலக்கியத்தின் தரத்தையும் வலிமையையும் கூட்டுவதற்கு இயக்கங்களின் துணை தேவை இல்லை. மேலைநாடுகளில் நசிந்துபோன சில இலக்கியங்களைத் தமிழ் நாட்டில் சில திறனாய்வாளர்கள் இறக்குமதி செய்கின்றார்கள். 'சர்ரியலிசம்', 'நவீனத்துவம்' 'பின்னை நவீனத்துவம்' என்று இலக்கியப் போக்குகள் இயக்கங்களின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன. இந்த இயக்கங்களை முன்னிறுத்தித் தமிழ்வாசகர்களை மிரட்டுகின்றார்கள். வளர்ந்து வருகின்ற இலக்கிய இயக்கங்கள் 'பழைமைவாதம்', 'பிராமணியம்', 'கம்யூனிசம்' போன்ற இயக்கப் போக்குகளை மறுவிசாரணைக்கு உட்படுத்துகின்றன.

இன்று தமிழிலக்கியத்தின் புதிய போக்குகளில் தலித்தியம், பெண்ணியம், நவீனத்துவம் சார்ந்த கோட்பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தமிழில் நவீனத்துவம் நுழைந்த போது, அது நடப்பியலுக்கு எதிரானதாகத் தோன்றவில்லை. படைப்பாளிக்கும் சமுதாயத்திற்குமான உறவை அது வளர்த்துப் பண்படுத்தவே செய்தது. நடப்பியலை மார்க்சியம், ஆற்றல் மிக்கதொரு புதிய வெளிப்பாடாகவே நோக்குகிறது. இந்த யதார்த்தம் கூடத் தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் சொந்த மானதல்ல. அது கற்பனை, புனைவு, கதை ஆகியனவற்றை விட்டுவிட்டு ஆங்கிலேயர்களின் யதார்த்தப் பாணியில் கதையாடலைப் பின்பற்றுகின்றது. ஐரோப்பியத் தன்மையில் இலக்கிய உடையணிந்த கறுப்புத்தோல் நவீனத் திறனாய்வாளர்களின் கூச்சல் தமிழிலக்கியத்தின் சாபக் கேடாகும். 'மரபுகளை எதிர்க்கின்றேன்' என்றஇலக்கியக் கூச்சல் தமிழ்நாட்டில்தான் அவ்வப்போது தலையெடுக்கின்றது.

**'பெண்ணியம்' கருத்துருவாக்கம்**

'பெண்ணியம்' என்றகருத்துருவாக்கம், ஆண்களை எதிர்க்கும் ஓர் அபாயகரமான போக்கன்று. உண்மையில் ஆண்கள் தம் ஆதிக்க வேட்கையினால் சமுதாய உற்பத்திக்கும் சமுதாய ஆக்கத்திற்கும் உரிய உந்து சக்தியாக விளங்கும் குடும்பத்தின் தலைமை உறுப்பினர்களான பெண்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி விட்ட சமூக வரலாறே பெண்ணிய மாகும். அதை இனம் கண்டு அந்த அடிப்படையில் மாற்றம் காண்பதற்கு பெண்கள் விழிப்புணர்வைப் பெறவேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இலக்கியப் படைப்புக்களின் அடிக்கருத்துக்கள் அமைய வேண்டும்; பெண்களின் ஆற்றல் (Women Empowerment) நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதே 'பெண்ணியம்' என்னும் கருத்துருவாக்கம் ஆகும்.

**பின்னணி**

'பெண்ணியம்' என்பது பின் நவீனத்துவக் கோட்பாடு களின் பின்னணியில் தோன்றியதாகும். பின் நவீனத்துவக் கோட்பாடு 1950 - 1960-களில் இலக்கிய அளவில் அமெரிக்காவில் தான் பேசப்பட்டது. அதன் பின்னரே ஐரோப்பிய நாடுகளுக்குப்

பரவியது. அமெரிக்க எழுத்தாளரான ஜான் பர்த் (John Barth) என்பவர் 1980-இல் பின் நவீனத்துவம் என்றஆட்சியைக் கையாண்டார். நவீனத்துவத்தின் மாற்றாகவும், மற்றொரு குரலாகவுமே பின்நவீனத்துவம் அமைந்துள்ளது. நவீனத் துவத்தின் தொடர்ச்சியாகவும், நவீனத்துவத்தை மறுத்தும் தோன்றியதே பின்நவீனத்துவமாகும்.

இது அறிவொளி இயக்கத்தின் வெளிப்பாடான பகுத்தறிவின் வன்முறையைத் தோலுரித்துக் காட்டியது. 'பின் நவீனத்துவம்' ஒரு எதிர்ப்புக் கோட்பாடு; 'பெண்ணியம்' என்பது கலகக்குரல். இவ்விரண்டும் இதுநாள் வரை நிலவும் மரபுப் பார்வையை உடைத்து, யதார்த்தத்தையும் சுயத்தையும் வெளிப் படுத்தும் உரத்த குரல்களாகும். மரபியல் சிந்தனையாளர்களை அதிர்ச்சிப்படுத்திய இவ்விரு இயக்கங்களும் இலக்கியம் மற்றும் வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகளில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றது. பின் நவீனத்துவத்தின் அடிப்படைக் கொள்கையான எதிர்ப்பு (opposition) என்பதே பெண்ணியத் திலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. காலங்காலமாகவும் தலைமுறைதலைமுறையாகவும் பெண்களைக் குடும்பம், பொருளாதாரம், சமூக இருப்பு ஆகிய நிலைமைகளில் அடக்கியும் ஒடுக்கியும் அதிகாரம் செலுத்திவந்த ஆண்களின் அடக்குமுறைக்கு எதிராகத் தீவிரமாகக் குரல் எழுப்புவது பெண்ணியமாகும்.

**பெண்ணியச் சிந்தனைகள்**

மரபுசார்ந்த பெண்ணிய வாழ்க்கைக்கு எதிரானது பெண்ணியமாகும். அது ஆணாதிக்கப் பார்வையில் படித் தறியப்பட்ட மரபு சார்ந்த கோட்பாடுகளைக் கட்டுடைத்து, நிலையான உண்மையை வெளியுலகிற்கு எடுத்துரைக்க முற்படுவதாகும். இதுநாள் வரையில் புனிதம், போற்றத்தக்கது, குறிக்கோளுடையது என்றெல்லாம் உணரப்பட்ட பிரதிகள் (Texts) புதிய கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பெண்ணியத் திறனாய்வில் பிரதிக் கோட்பாடு (Textual Theory) என்பதும் ஒன்றாகும். எந்தவொரு இலக்கியப் பிரதிக்கும்

நிலையான, கட்டுப்படுத்தப்பட்ட பொருள் கிடையாது என்னும் பின்நவீனத்துவச் சிந்தனையே பெண்ணியவாதிகளால் பிரதிக்கோட்பாட்டு ஆய்வாக முன்னிறுத்தப்பட்டுள்ளது.

சமுதாய அமைப்பின் முரண்பாடுகளில் தோன்றுகின்ற சிக்கல்கள் இலக்கியங்களில் சில புதிய வடிவங்களில் வெளிப் படுகின்றன. நிலவுடைமைச் சமுதாயப் பண்பாட்டு மரபுகள் மறைந்து, முதலாளித்துவப் பண்பாட்டுக் கூறுகள் எழுச்சி பெற்றுள்ள இக்காலத்தில் அதற்கேற்ப புதிய சிக்கல்களும் தோன்றியுள்ளன. தொடக்கக் காலத்துத் தமிழ்ப் புதினங்களில் குழந்தை மணமும் விதவையர் துயரமும் முதன்மையானதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இன்றைய புனைகதைகளில் முதலாளித்துவப் பொருளாதாரம் தந்த நெருக்கடியின் காரணமாக மணமாகாத முதிர் கன்னி நிலைகளும் மணமுறிவுகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன. வரதட்சணைச் சிக்கலும் அண்மைக் காலப் புனைகதைகளில் பெருமிடத்தைப் பெற்றுள்ளன.

பெண் விடுதலையைப் பொருள்படுத்தி வரையறுப்பதில் வேறுபாடுகள் இருப்பினும், பழைய மரபு சார்ந்த தளைகளை உடைப்பதற்கான முயற்சிகளைப் பரவலாக இன்றைய இலக்கியங்களால் காணமுடிகின்றது. இதனையொட்டியே அலுவல் மகளிர் சிக்கல்கள் அமைகின்றன. பெண் என்பதாலேயே அலுவலகங்களில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள், குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள், பெண்களின் பங்கு மற்றும் பங்கேற்பு நிலைச் சிக்கல்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. குடியாட்சியும் அறிவியல் தொழில் நுட்பமும் மலர்ச்சி பெற்றுள்ள இக்காலத்தில் பெண்களின் புதிய நிலைப்பாடும் பரிமாணமும் கவனிப்பிற்குரிய ஒன்றாகும். மறுபுறம் பெண்களின் வளர்ச்சியை மட்டப்படுத்தும் முயற்சிகளையும் இன்றைய இலக்கியங்களில் காணமுடிகின்றது.

அண்மைக் காலங்களில் இலக்கியம் சார்ந்து மிகுதியாக ஒலித்துக் கொண்டிருக்கும் குரல் (சொல்) 'பெண்ணியம்' (feminism) என்பதாகும். பெண்கள் அனுபவிக்கும் அனைத்து விதமான அடக்குமுறைகளையும் எதிர்ப்பதோடு, பெண்களின்

முன்னேற்றத்திற்கான வழிமுறைகளையும் பெண்ணியம் செயல்படுத்த முற்படுகின்றது. இன்றைய காலத்தில் பேசப்படும் 'பெண்ணியம்' அறிவியல் அடிப்படையில் தத்துவப் பின்புலத்தில் புனிதமானது எனப் போற்றப்பட்டுவரும் குடும்பம் உள்ளிட்ட அனைத்தையும் கருணையின்றிக் கேள்விக்கு உட்படுத்தும் போராட்டக் குணம் கொண்டதாகும். பெண்களே இத்தகைய தேடலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். பெண்ணிய வாதிகள், வரையறுத்து நிலைப்படுத்தப்பட்டுள்ள கோட்பாடு களில் இருந்து தப்பிச் செல்லவே விரும்புகின்றனர்.

மரபு ரீதியான ஆணாதிக்கக் கோட்பாடுகளை உடைக்க விரும்பும் பெண்கள், உண்மையிலேயே ஆண் அதிகாரத்தை மறுதலிக்கின்றலெக்கான், தெரிதா ஆகியோரின் நெறிப்பட்ட பிற்கால அமைப்பியல் திறனாய்வில் பெரிதும் ஈடுபாடு கொள்கின்றனர். பெண்ணியக் கோட்பாடுகள் பெண்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களின் நனவிலி மனத்திலிருந்து (Unconscious mind) தோன்றும் வாய்ப்புள்ளது. ஆதலால் பெண்கள் தங்களுக்கான மொழியைத் தாங்களே உற்புத்தி செய்து கொள்ளவேண்டும். இவ்வாறு உருவாக்கப்படும் மொழியும் கருத்தாக்கங்களும் ஆண்களின் பார்வையில் பகுத்தறிவுக்கு உட்படாமல் கூடத் தோன்றலாம்.

'பெண் விடுதலையைப்' பாலியல் விடுதலையாகப் பொருள் கொண்டு, பெண் விரும்பிய ஆடவனுடன் பாலியல் தொடர்பு கொள்ளலாம் என்று பேசுவது பெண்ணியத்தை உண்மையில் கொச்சைப் படுத்துவதாகும். 'குடும்பமே வேண்டாம்; அதை உடைத்தெறி' எனக் குரல் கொடுப்பது மனித நாகரிகத்தையே மறுப்பதாகும். பெண்ணியத்தில் அதன் நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் போக்கும், நியாயத்தையே நிராகரிக்கும் போக்கும், அநியாயத்திற்கு வித்திடும் போக்கும் இன்றைய இலக்கியங்களில் காணப்படுகின்றன. பெண்ணுரி மையை நிலைநாட்டும் இருண்மைச் சிந்தனையில்,

*"கண்ணா காப்பாற்று*

...... ......

துச்சாதனன் ஓடிவந்தான்

திரௌபதியின் கையில் வேஷ்டி"

என்ற சிதைவும் இன்று ஏற்பட்டுள்ளது. தொல்காப்பியம் 'ஒத்த தலைவனும்' தலைவியும் காண்ப' என்னும் நூற்பாவையடுத்து 'மிக்கோ னாயினும் கடிவரை யின்றே' என்று இலக்கணம் வகுத்துள்ளது. தலைவியை விடத் தலைவன் உயர்ந்தவனாக இருக்க வேண்டும் என்றகருத்தமைவில் தொல்காப்பியம் பாத்திரப் படைப்பாக்க முறையைச் சுட்டியுள்ளது.

உயிரை விட நாணம் சிறந்தது; நாணத்தைவிடக் கற்பு சிறந்தது. தன் காதல் மற்றும் காம உணர்ச்சியைத் தலைவனிடம் வெளிப்படுத்தும் உரிமை தலைவிக்கு இல்லை. தன்னைப் புகழ்ந்துரைக்கும் உரிமையும் தலைவிக்கு இல்லை எனத் தொல்காப்பியம் பெண்ணுக்குரிய கட்டுப்பாடுகளைக் கடுமையாக விதித்துள்ளது. கற்பு நிலையில் நின்று, பெண்கள் எந்த அளவிற்கு இலக்கியங்களிலும் நீதிநூல்களிலும் மதிக்கப் பெற்று பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர் என்று ஆய்வு நோக்கத்தைப் பதிப்பதும் கருத்துக்களை வெளிப்படுத்துவதும் பெண்நிலை வாதமாகும். ஓர் ஆணின் மேலாண்மை வகுத்த அளவுகோல்களைக் கொண்டு மதிப்பீடு செய்யும் விமர்சனப் போக்கிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டதாகும்.

நீதிநூல்களும் சமயத் தத்துவங்களும் ஆண்களை முதன்மைப்படுத்தியே படைக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளும் பகவத்கீதையும் கூட ஆண்களையே முன்னிலைப் படுத்துகின்றன. திருக்குறள், பெண்களுக்குக் கணவனைத் தெய்வமாகத் தொழும் அடிமைத் தத்துவத்தை வலியுறுத்து கின்றது. மானுடம் என்றஅடிப்படையில் பாத்திர வார்ப்பு அமையாமல் பாலடிப்படையிலான ஆண் பெண் வேறுபாடு, ஆணுக்கு அடுத்த நிலையில் பெண் என்னும் பாத்திர ஆக்கம் சற்று வித்தியாசமாகவே சங்க இலக்கியங்களில் வெளிப்படுகின்றது. இம்முறைகாப்பிய இலக்கியங்களிலும் தற்காத்து, தன்னைக் கொண்டவனைப் பேணும் கோட்பாடாக மாறியுள்ளது.

கண்ணகி, சீதை ஆகியோரின் படிமங்கள் காப்பியங்கள் பெண்மை உலகிற்குத் தந்த கொடையாகும். 'ஆடவனுக்கு

அடங்கியவள் பெண்' என்றபழந்தமிழ் இலக்கியப் போக்கை மாற்றி நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் கொண்ட புதுமைப் பெண்ணைக் கோட்பாட்டளவில் தந்தவன் பாரதி. அதற்கு இலக்கியமாக அவன் பாஞ்சாலியைப் படைத்தான். திரௌபதியின் துகிலுரிவைப் பாஞ்சாலி சபதமாக மாற்றிக் காட்டிய பாரதியாரின்,

*"தாயத்தில் விலைப்பட்டபின், என்ன*
*சாத்திரத்தாலென்னைத் தோற்றிட்டார்? அவர்*
*தாயத்திலே விலைப்பட்டவர் புவி*
*தாங்கும் துருபதன் கன்னிநான் - நிலை*
*சாய்ப் புலைத் தொண்டு சார்ந்திட்டால் பின்பு*
*தாரமுடைமை அவர்க்குண்டோ?"*

என்னும் வரிகளில் திரௌபதி உரிமையைக் கேட்கும் நாயகியாகவே வீறுகொள்கின்றாள்.

இசுலாமிய நாடக ஆசிரியரான வண்ணக் களஞ்சியப் புலவர் 'அலிபாதுஷா' என்றநாடகத்தில்,

*"சாதிகள் வளரச் சாஸ்திரம் நடக்க*
*புருஷர்கள் சொல்லிப் பெண்டுகள் நடக்க*
*வரிசைகள் பெறுக மாநகர் தழைக்க"*

என்கின்றார். ஆடவர் சொற்படியே பெண்கள் ஒழுக வேண்டும் என்று இசுலாம் வலியுறுத்தும் பெண் ஒழுக்கத்தையே இது காட்டுகின்றது. அனைத்துப் பெண்ணுரிமைகளையும் வழங்கியுள்ள இசுலாம் குடும்பத் தலைமையைத் தலைவனுக்குக் கொடுத்துச் சார்பு நிலையைக் குடும்பத் தலைவிக்குக் கொடுத்திருப்பது சிந்தனைக்குரியதே.

தமிழ்ப் புதினங்களில் குடும்பச் சிக்கல், சமுதாயச் சிக்கல் மற்றும் வட்டாரச் சிக்கல்கள் மையப்படுத்தப்படுகின்றன. சமுதாயப் பிரச்சினைகளில் அரசியல் கூறுகள் ஆங்காங்கே தலைதூக்குகின்றன. அலுவலகங்களிலும் வீடுகளிலும் பெண்கள் படும் பாட்டை விளக்கும் கதைகளையும், பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் பிரச்சினைகளை விளக்கும்

கதைகளையும் வாசகர்கள் மிகுந்த எதிர்பார்ப்பு மற்றும் ஆர்வத்துடன் படிக்கின்றனர். பிரபஞ்சன், சு. சமுத்திரம், ஜோதிர்லதா கிரிஜா, வாசந்தி, சூடாமணி, வித்தியா சுப்பிரமணியன் ஆகியோர் நாவல்களில் பெண் பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் அலசப்படுகின்றன. பரிவுடன் அவற்றை அணுகுவதோடு தீர்வுகளையும் முன்வைக்கும் துணிச்சல் இவர்கள் நாவல்களில் காணப்படுகின்றன.

தற்காலப் பெண்களுக்குக் கிடைத்துள்ள பொருளியல் விடுதலை, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய அனைத்தும் பெண்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக இருப்பதால், ஆண்-பெண் இருவருக்கும் குடும்பம் சமமாக இல்லாமல், ஆணாதிக்கம் மிகும் நிலையில், பெண்கள் தம்முடைய சுயதிறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதிலும், சிறுமை கண்டு பொங்கியெழுந்து அதைப் போராடி வெல்லும் ஊக்கத்தைப் பெறுவதிலும், பெண்ணியம் பெண்களுக்கு நம்பிக்கையை வழங்கிப் பெண்களை வெற்றி வீராங்கனைகளாக மாற்றி வருகின்றது. இன்றைய பெண்ணியல்பைச் சித்திரிக்கும் இத்தகைய போக்கே இன்றைய தமிழ்ப் புதினங்களில் பெரிதும் காணப்படுகின்றன.

உண்மையான பெண்ணியப் பிரச்சினைகள் முக்கியமாகக் கிராமப்புறப் பெண்களின் பொருளாதாரப் பிரச்சினைகள், சாதிய சமூகக் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் ஆகியன தமிழ் நாவல்களில் பின்தங்கியுள்ளன. ஒடுக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகள், அவர்களின் அப்பாவித்தனத்தின் மூடநம்பிக்கைகளின் சுரண்டல்கள் பற்றிய புனைகதைகள் மிகவும் குறைவே. கிராமத்துப் பெண்களின் கதைகளைவிட நகரத்துப் பெண்களின் கதைகளே மிகுதியாக படைக்கப்பட்டு வருகின்றன. பெண்களைச் சமைக்கவும் கோலம்போடப் பிறந்தவர்களாகவும் கருதி பல மகளிர் இதழ்கள், பெண்களுக்கு ஊறுகாய் போடக் கற்பிக்கும் பழம் பாட்டிகளாகவே நடக்கின்றன. இதழ்கள், துயரங்களையே சுமந்து பழகிய பெண்களுக்குத் துப்பாக்கியைத் தூக்கவும் பயிற்சி கொடுக்க வேண்டும்.

"பெண்ணிற்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றைக் குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால் வையம்
பேதைமை யற்றிடும் காணீர்"

என்னும் பாரதியாரின் கவிதை நோக்கத்தை நிறைவேற்றினால் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெண்கள் உரிமையுடன் வாழமுடியும்.

# பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்

**முனைவர் மா.செல்வத்தரசி**
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

**சென்ற இதழின் தொடர்ச்சி**

இளந்திரையனின் நாட்டில் உள்ள கானவர்கள் ஈச்சவிதை போன்ற சிவந்த நிறமுடைய சோற்றினை உடும்புக் கறிப் பொரிய லோடு வீடுகள் தோறும் உண்ணக் கொடுத்துள்ளனர். ஆயர்கள் தினைச் சோற்றைப் பாலுடன் வழங்கியுள்ளனர். முல்லை மக்கள் வரகின் சோற்றை அவரை விதையுடன் துழாவிய மூரல் சோற்றை வழங்கியிருக்கின்றனர். மருதநில உழவர்கள் நெல் சோற்றை வீட்டில் உள்ள பெட்டைக் கோழிக்கறி கொண்டு சமைத்த பொரியலுடன் விருந்து செய்துள்ளனர். கரும்புக் கொட்டில்களில் உள்ள கரும்பின் சாற்றை வேண்டிய அளவிற்குக் கொடுத்துள்ளனர்.

வலைஞர்கள் கொழியல் அரிசியைக் களியாகச் சமைத்து உருவாக்கிய கூழை அகலமான வாயினை உடைய தட்டில் இட்டு ஆறச் செய்துள்ளனர். பின்பு முளை அரிசியை அதனுடன் சேர்த்து அக்களி சுவை உடையதாகும்படி இரண்டு பகல் வேளையும் இரண்டு இரவு வேளையும் கழித்து வலிமையான வாயினை உடைய சாடியில் இட்டு வெந்நீரில் வேகவைத்துள்ளனர். பின்பு வடி கட்டியால் வடிகட்டி விரலால் துழாவிப் பிழியப்பட்ட மணம் மிகுந்த கள்ளினைப் பச்சைமீன், சுட்ட கறியுடன் நடைப்பயணத்தின் துன்பம் தீர அளித்துள்ளனர். ச.வே.சுப்பிரமணியன், "ஜப்பான் நாட்டில் அரிசியில் கள்ளை உருவாக்கினர். அது மயக்கம் தருவதில்லை. மிகுந்த சுவையுடன் இருக்கும். அரிசியால் செய்யப்பெறும் தேறல் வகைகள் பல ஜப்பான் நாட்டில் இன்றும் கிடைக்கின்றன" என்கிறார். அந்தணர்களில் வளையல் அணிந்த கையினை உடைய பார்ப்பனப் பெண் கருடச்சம்பா என்ற நெல் சோற்றை வழங்கி யுள்ளனர். பசுவின் மணம் வீசும் மோரில் எடுத்த வெண்ணெயில்

மாதுளங்காய் கொம்மடிக்காய் ஆகியவற்றைப் பொரித்து மிளகுத் தூளும் கறிவேப்பிலையும் தூவப்பட்ட பொரியலையும் மாவடு ஊறுகாயினையும் மாலை வேளையில் கொடுத்திருக்கின்றனர். பட்டினத்தார் இல்லங்களில் ஓய்வெடுத்தீர்களானால் கள் தயாரிக்கும் பெண்கள் ஆண் பன்றியின் வளமான தசையினையும் மகிழ்ச்சி தரும் கள்ளையும் பருகத்தருவர். பன்றிகளுக்கு நெல்லை இடித்த மாவை உணவாகக் கொடுத்திருக்கின்றனர். தோப்பு வீடுகளில் வாழைக்கனி, பனை நுங்கு, சேப்பங்கிழங்கு ஆகியவை வழங்கப் பட்டிருக்கிறது.

இளந்திரையனின் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு இருந்தது என்பதும் எடுத்துரைக்கப்படுகிறது. முதலில் பாலாடை போன்று விளங்கிய நூலால் நெய்யப்பட்ட ஆடைகளை உடுக்கத் தந்துள்ளான். விண்மீன் போன்று விளங்கும் அழகான வெள்ளிக் கலங்களில் நெல் அரிசிச் சோற்றினை,

"மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனாவிருப்பிற் றானின் றூட்டி" (பத்து.பா.வரி. 478 – 479)

தாய் தன் பிள்ளையைப் பார்ப்பது போல முகத்தால் விருப்பம் கொண்டு பார்த்துத்தானே எதிரில் நின்று உபசரித்து உள்ளான்.

இளந்திரையனின் நாட்டில் எயினர், கானவர், ஆயர், உழவர், அந்தணர், பட்டினத்தார், தோப்புவீட்டு மக்கள் என்று அனைவரும் விருந்தினை ஏற்றுச் செய்துள்ளனர். வறுமையிலும் விருந்தால் பசியாற்றியுள்ளனர். அந்தந்த நிலத்தில் விளைந்த பொருட்களைக் கொண்டு விருந்து செய்துள்ளனர். தாயானவள் தன் குழந்தையின் முகத்தைப் பார்த்து பல எண்ணங் கொண்ட வளாக அமுதூட்டுவது போல் முகத்தால் விருப்பம் கொண்டு விருந்தோம்பலைச் செய்திருக்கிறான்.

**மலைபடுகடாமில் விருந்தோம்பல் பண்பு**

மலைபடுகடாம் - கடாம் என்ற சொல்லுக்கு இங்கு ஓசை என்பது பொருள். மலையில் பட்ட பல ஓசைகளின் தொகுப்பு மலைபடுகடாம் என்று ஆயிற்று.

பாடியபுலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங் கௌசிகனார். பாட்டுடைத் தலைவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் ஆவான். இவன் வேளிர் குலத்தைச் சார்ந்தவன். நன்னன் வேண்மான் என்றும் அழைக்கப்பெற்றான். வேண்மான் என்பது வேளிர் தலைவன் என்று பொருள்படும். இவனது தந்தையின் பெயரும் நன்னன் என்பதாகும். பல்குன்றக்கோட்டத்தைத் தன்பால் கொண்டிருந்தான். செங்க்ண்மா என்ற ஊர் திருவண்ணாமலைக்கு அருகில் உள்ளது. இங்குள்ள அரண்மனையில் வெளியூரில் இருந்து வந்தவர்கள் தங்கிச் சென்றிருக்கின்றனர். இவனது நாட்டில் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு இருந்தது என்பது எடுத்துரைக்கப்படுகிறது.

நன்னனது நாட்டிலுள்ள பாக்கத்தார் விருந்தினரை பழைய உறவினர்களைக் கண்டதுபோல் உறவு பாராட்டி களைப்புத்தீர இனிமையாகப் பேசியுள்ளனர். அவர்கள் நெய்யில் வெந்த தசைப் பொரியலுடன் நிறமுடைய தினைச் சோற்றினை உண்ணக் கொடுத்துள்ளனர். குறமகள் மலையில் கிடைத்த பொருளுடன் மூங்கில் குழாயில் பக்குவப்படுத்தப்பட்ட தேனால் செய்த கள்ளினை உண்ணக் கொடுத்துள்ளனர். ச.வே.சுப்பிரமணியன், “குறிஞ்சி-மூங்கில் அரிசியைக் கொண்டு அத்துடன் தேனையும் கலந்து கள் தெளிவைத் தயாரித்தனர். அதை மூங்கில் குழாய்களில் வைத்திருந் தனர். அது தேக்கள் தேறல் என்று அழைக்கப்பட்டது” என்பார். அடுத்தாக நெல்கொண்டு சமைத்து உருவாக்கிய கள்ளினையும் வைகறைப் பொழுதில் வழக்கமாக உண்ணும் கள்ளையும் கொடுத் துள்ளனர். நெல்லால் சமைக்கப்பட்ட கள் நறவு என்பதும் அறியப் படுகிறது. அத்துடன் கடமானின் வளமான தசையும் பன்றியின் கொழுப்பு மிகுந்த தசையினையும் உடும்பின் கறியோடு புளியும் மோரும் கலந்து ஆக்கிய சோற்றினை வீடுகள் தோறும் உண்பதற் காகக் கொடுத்துள்ளனர். இடையர்கள் பால்கலந்த உணவினையும் கானவர் மாமிச உணவுடன் கிழங்குகளையும் கொடுத்துள்ளனர். புளியங் கூழினை உடல் வருத்தம் நீங்கத் தந்துள்ளனர். கழிகளையும் கொடுத்துள்ளனர். அரிசியை வெள்ளாட்டுக் கறியுடன் சேர்த்து சமைத்த சோற்றின் நடுவில் குழி பறித்து நெய்யை ஊற்றி

சர்க்கரைத் துகள்களை ஒத்த தினைமாவுடன் உண்ணத் தந்திருக் கின்றனர். பழையர் வரால் மீன் துண்டினையும் உழவர்கள் நெல் அரிசி கொண்டு ஆக்கப்பட்ட கள்ளினைக் களங்கள் தோறும் காலை நேரத்தில் உண்பதற்கு அளித்துள்ளனர்.

நன்னனின் விருந்தோம்பலாக, முதலில் நூலால் நெய்யப் பட்ட ஆடைகளை உடுத்தக் கொடுத்துள்ளான். முதல் நாள் விருந்தோம்பியது போன்று நாள்தோறும் மாமிசத்துடன் வெண்ணெல் அரிசிச் சோற்றினைத் தடையில்லாமல் கொடுத்துள்ளான்.

நன்னனது நாட்டில் கானவர், பாக்கத்தார், குறமகள், பழையர், உழவர் ஆகியோர் விருந்தோம்பலைச் செய்துள்ளனர். முதல் நாள் விரும்பியது போன்றே நாள்தோறும் விருந்து செய்திருக்கிறான் என்றால் அன்றலர்ந்த மலராகவே விளங்கக் கூடியவன் என்பதும் அறியமுடிகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்களின் பண்பாடு விருந்தோம்பலால் சிறப்புப் பெறுகிறது. உணவை விட மானம் முக்கியம் என்பதை உணர்ந்த வள்ளல்கள், முதலில் தூய ஆடைகளை உடுக்கத் தந்துள்ளனர். விருந்தில் கள் முக்கிய இடம் வகிக்கிறது. அதன் வகை, பயன், தயாரிப்பு அறியப்பட்டது. விருந்தோம்பல் பெண்களால் செய்யப் பட்டிருக்கிறது. உயர்ந்த உணவுகளை ஒளிமிக்கக் கலங்களில் வழங்கியுள்ளனர். விருந்தில் ஊன் உணவே அதிகமாக இடம் பெற்றிருக்கிறது. சமையலில் சுடலும் பொரித்தலும் அதிகமாக இடம்பெற்றிருக்கிறது. விருந்தினரை எதிர்பார்த்திருந்து உண வளித்துள்ளனர். இல்லை என்ற சொல் அறியா மக்களின் வாழ்வாதாரமே பண்பாட்டினை நிலை நாட்டுகிறது. தமிழரை அடையாளப்படுத்தி பண்பாட்டைத் தலைநிமிரச் செய்வதே விருந்தோம்பலாகும் என்பது நிலைநாட்டப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.148.
2. அ.கா.பெருமாள், சின்னசாமி, தமிழினி, குடிபோதை புனைவுகள் தெளிவுகள், ப.71.
3. மேலது, ப.242.
4. மேலது, ப.121.
5. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு பெரும்பாண் ஆற்றுப்படை, ப.18.
6. மேலது, ப.18.

# செந்தமிழ் ஈந்த நந்தா விளக்கு

மு.கு.ஜகந்நாத ராஜா
இராசபாளையம்.

**தி**ருமலிந்த தீந்தமிழின் பழமையும், செழுமையும் இலக்கிய வளமும் உயர்தனிச் செம்மொழிச் சிறப்பும் இன்று உலகம் நன் குணர்ந்துள்ளது. அண்மையில் நடுவண்அரசு சட்டப்பூர்வமாகச் செம்மொழித் தகுதியினை உலகுக்குணர்த்தியுள்ளது. மக்கள் பேச்சு வழக்கில் இன்று வடமொழி எனும் சமஸ்கிருதம் இல்லை. அதிலிருந்து புத்தர் காலத்திலேயே திரிந்த பிராகிருத மொழி (பாலி, அர்த்தமாகதி) முதலியனவும் பேச்சு வழக்கில் இல்லை. நூல் வழக்கிலும் சமண பவுத்த மத வழிபாட்டில்தான் அவைகளும் உள்ளன. இன்று இந்தியாவில் பேசப்படும் மொழிகள் எல்லாமே ஆரிய மொழிக் குடும்பத்தையோ, திராவிட மொழிக் குடும்பத்தை யோ சேர்ந்தவையாய் உள்ளன. பாரசீகம், ஜெண்ட அவஸ்தா மொழி சமஸ்கிருதத்தோடு நெருங்கிய தொடர்புடையதே. நம் நாட்டில் சங்ககாலத்திலேயே யவன, கிரேக்கர் தொடர்புகள் குறித்துச் சான்றுகள் உள்ளன. பிற்காலத்தில் நபிகள்நாயகம் காலத்திலிருந்து முகம்மதியர்கள் நம் நாட்டில் புகுந்து விட்டதால், அவர்களது மதம் கட்டுப்பாடுடைய மதமாக வேரூன்றியுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாக கிறிஸ்துவ மதப்பிரசாரகர்களும் தமிழகம் வந்து தம் மதம் பரப்பின வரலாற்றுண்மைகளை மறக்க இயலாது. இவற்றால் விளைந்த பரிணாமத்தால் தமிழ் இலக்கியங் களைக் காப்பாற்றும் ஒரு நிறுவனம் இல்லாது போயிற்று. மத நோக்கில்தான் தங்கள், தங்கள் மத நூல்களைக் காப்பாற்ற மரபு வழிப்பட்ட சமய ஆச்சாரியர்களும், அவர்கள் நிறுவிய மடங்களும் முற்பட்டன.

வரலாற்று ரீதியாய்ப் பார்த்தால் தங்கள் தாய்மொழியைப் பாதுகாக்கவும், வளப்படுத்தவும் தமிழில் மட்டுமே முதன்முதலில் சங்கங்கள் ஏற்படுத்தினர். இறையனார் அகப்பொருள் உரையாசிரி யர்கள் கூறும் முச்சங்க வரலாற்றில் புராண கற்பனைக் கதை

களையும் சேர்த்துத் தந்துள்ளார்கள். வரலாற்று ரீதியான ஆய்வாதாரமில்லை. தமிழுக்கே உரிய காப்பியங்கள் இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை மட்டுமே. சீவக சிந்தாமணி சமண தீர்த்தங்கரர் கதைகளிலிருந்து வந்தது. பிற் காலத்தில் ராஜராஜன் காலத்தில் எழுந்த - சேக்கிழார் தொகுத்த - பெரியபுராணம், சமணமகாபுராண பிராகிருத நூலுக்கு இணையாகச் சைவநூல் வேண்டிப் படைத்ததாக அறிகிறோம். ஆக மதநோக்கில் தான் சங்கங்களும் நூல் வெளியீடுகளும் தொன்மைக்காலமாகவே நிகழ்ந்து வந்துள்ளன. இதற்கு மாறாக, மத நோக்கமோ, இன நோக்கமோ இன்றித் தமிழ்மொழி வளத்திற்காகத் தோன்றிய சங்கமே மதுரைத் தமிழ்ச் சங்கமாகும். கூலவாணிகள் சாத்தன் வாழ்ந்து தமிழ் வளர்த்த அதே மதுரையில் இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறது மதுரைத் தமிழ்ச் சங்கம். சிறந்த தமிழ்த்தொகை நூல் புதிதாகப் படைத்தளித்தவரும், தமிழே அமுதும் ஆருயிரும் எனப் போற்றியவருமாகிய பாண்டித்துரைத் தேவர் அவர்களும் விவேகானந்தரை மேனாட்டுக்கு உலகசமய சபைக்கு அனுப்பிவைத்து இந்திய நாட்டுக்கே பெருமையும் சுதந்திர உணர்வும் ஈந்தவரான அப்பெருமானுக்கு ஆதரவு காட்டிய இராமநாதபுரம் மன்னராகிய பாசுகர சேதுபதியவர்களும் அடித்தளம் அமைத்துத் தந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மாண்பினை அறியா தார் யார்? இத்துணைச் சிறப்புமிக்க மதுரைத் தமிழ்ச் சங்கத்துடன் தொடர்பில்லாத தமிழ்ப்பேரறிஞர்கள் எவருமிலர்.

என் கெழுதகை நண்பரும் பட்டிமன்றப் பேச்சாளர்களில் சிறந்திருந்தவருமான பேராசிரியர் துரைராஜ் அவர்கள் தமிழ்க் கல்லூரி முதல்வராக இருந்தபோது நான் தமிழ்ச் சங்கத்திற்குப் பல தடவை வந்துள்ளேன். அவர் காலமான பிறகு, அங்கு வரவும் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பில்லாது போனது. மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிடும் செந்தமிழ் இதழ்களும் பிரசுரங்களும்தாம் என் தமிழ் ஆய்வுக்கு உரமூட்டியவை. ரா.ராகவையங்காரால் செந்தமிழ்ப் பிரசுரமாக 1953இல் வந்த இரண்டாம் பதிப்புநூல் தான் என்னைத் தமிழ்க் காதலனாக மாற்றியது. பின்னர் நான் தென்காசியில் வசித்த ஓராண்டில் ரசிகமணி டி.கே.சி.யின் பாதந்தொட்டுப் பணிந்து முத்தொள்ளாயிரம் படித்தது மூலமாகக் கவிதை என்றால் என்ன?

செய்யுள் என்றால் என்ன? தொனி என்றால் என்ன? என்பதை - எனது இருபத்தைந்தாம் வயதில் - புரிந்து கொண்டேன். (பின்னர் வடமொழி பயின்று, அலங்கார சாத்திர நூல்கள் தொன்யாலோகம், ஔகித்ய விசாரசர்ச்சா போன்றவை பயின்றபின் திறனாய்வுத் துறையிலும் அறிமுகப்படுத்திக் கொண்டேன்). இவ்விதமாக முத் தொள்ளாயிர முத்துகளை இழந்தவை போக சிலவற்றையாவது மீட்டுத் தந்தது மதுரைத் தமிழ்ச்சங்க ஏடுதான்.

1938இல் சென்னைப் பல்கலைக்கழகம் சார்பில் வையாபுரிப் பிள்ளையவர்கள் புறத்திரட்டு ஏட்டுப்பிரதியை வெளியிட்டு அதிலிருந்த முத்தொள்ளாயிரப் பாடல்களையும் வெளியிட்டார். பின்னர் டி.கே.சி. 1943இல் முத்தொள்ளாயிரப் பாடல்களைத் தம் விளக்க உரையுடன் வெளியிட்டார். கவிதையின் உயிர்த்துடிப்பான தொனி தத்துவத்தை விளக்க உதாரணமான பாடல்கள் மலிந்த முத்தொள்ளாயிரம் மதுரைத் தமிழ்ச்சங்கம் தந்த பரிசாகவே நான் மதிக்கிறேன். முத்தொள்ளாயிரத்தை நான் 1978இல் தெலுங்காக்கம் செய்து வெளியிட்டேன்.

நான் 1965இல் இராஜபாளையத்தில் தெலுங்கு வித்யாலயம் என்ற பெயரில் ஓர் அமைப்பினைத் தமிழகத்தெலுங்கு உறவுக்காகத் தோற்றுவித்து நடத்தி வந்தேன். அதன் வெள்ளி விழா 18-11-90, 19-11-90இல் சிறப்பாக நடைபெற்றது. அதில் சிறப்புமலர் வெளியிட்டோம். அம்மலரில் முதல் கட்டுரையாகத் "தமிழரும் ஆந்திரரும்" என்று மு.ராகவைய்யங்கார் அவர்களால் மதுரைச் சங்கத்து 23ஆம் ஆண்டு திருவிழாவில் படிக்கப்பட்ட கட்டுரையை மறுபிரசுரம் செய்தோம். அக்கட்டுரை செந்தமிழ் 22ஆம் தொகுதியில் வந்தது. தமிழுக்கும் தெலுங்குக்கும் உள்ள பழங்கால உறவுகளை ஆய்ந்து கூறப்பட்ட அற்புதமான தகவல் களஞ்சியமாக அக்கட்டுரை உள்ளது. சென்னை கல்வி மந்திரி ஸ்ரீமான் சர். பரசுராம பாத்ரோ அவர்களின் தலைமையில் மு.ராகவையங்காரால் படிக்கப்பட்ட கட்டுரை செந்தமிழ்த் தொகுதி 22இல் வந்துள்ளது. இருபத்தொரு பக்கமுள்ள அக்கட்டுரை தமிழ் தெலுங்கு நாட்டுறவுக்கு ஆவணமாகத் திகழும் மதிப்புடையது. மதுரைத் தமிழ்ச்சங்கம் பல அரிய நூல்களையும் வெளியிட்டதை நாம் அறிவோம். சங்க இலக்கிய நூல்கள், ஐந்திணைஐம்பது, பழமொழி, நான்மணிக்

கடிகை போன்றவை வெளியிடப்பட்டன. நாராயணய்யங்கார் 1922இல் பழமொழி மூலமும் உரையும் பதிப்பித்தார். மு.ராகவையய்ங்கார், ரா.ராகவய்யங்கார், தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதய்யர் (சிராமலைக்கோவை பரிசோதித்து 1937இல் வெளியிட்டது. கலசைக்கோவை 1935இல் வெளியிட்டது) போன்றோர்; தமிழ்ச் சங்கத்தில் நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்தனர். இத்தகைய தமிழ் வளர்த்த தலைமைச் சான்றோர்களைக் கொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் செய்த தொண்டை வியந்து போற்றுகிறோம்.

நமது இந்திய இலக்கியமும் பண்பாடும் தொன்மைக்காலத்திலிருந்தே வைதிக நெறியையும், சமண, பவுத்த நெறிகளையும் சார்ந்தே உள்ளன. புறநானூற்றிலேயே வேத நான்மறைகளைப் பற்றியும் சமண, ஆசீவக, பவுத்தமதப் பிரிவுகளையும் சார்ந்த பாடல்களைக் காண்கிறோம். இந்தத் தொன்மையான மதங்களின் ஒருமைப் பாட்டுணர்வினைச் சிலப்பதிகாரமே சான்றாக நின்று விளக்குகிறது. இதனையே மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட நூல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

செந்தமிழ் இதழ்கள் மூலம் சமணச் சான்றோர்கள் பலரது நூல்களும் வரலாறுகளும் உணரமுடிகிறது. சமண தத்துவத்தைச் சார்ந்த சில நல்லிலக்கிய நூல்களை வெளியிட்டுள்ளனர். இது சமண சமயத்தினருக்குப் பேருதவி செய்துள்ள தன்மையை விளக்குகிறது. உதாரணமாக இரு நூல்களைக் குறிப்பிடுகிறேன்.

அவிரோதியாழ்வார் இயற்றிய திருநூற்றந்தாதி நூலின் முதற்பதிப்பின் முன்னுரையில் ரா.ராகவைய்யங்கார் சமண தத்துவ நூல்களின் நுட்பங்களை வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1935இல் வந்தது. அந்நூலை நான் பயின்று மகிழ்ந்தேன். இது போன்ற மற்றொரு சமண நூல் உதீசிதேவர் இயற்றிய திருக்கலம்பகம். இந்நூலை மு.ராகவைய்யங்கார் பரிசோதித்து வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1951இல் வெளிவந்தது. மூலமும் உரையுமுடைய பிரதியையே பரிசோதித்து வெளியிட்டார்.

மூலநூலாசிரியர் ஆரணி நெடுந்துறை ஆர்ப்பாகைக்கோள்

என்று பாயிரத்தில் உள்ளது. இவர் சமண தத்துவத்தில் வல்லவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வரிய இலக்கியங்களை மதுரைத் தமிழ்ச்சங்கம் வெளியிட்டுத் தமிழிலக்கிய உலகுக்கு மகோபகாரம் செய்ததை நினைவு கூரவேண்டும்.

செழுமை மிக்க நிலமாயினும் பயிர்கள் மேலும் செழித்துப் பயன்தர வேற்றுப்புல மண்ணையும் சத்துப்பொருள்களையும் உரமாக இடுவது போல நமது தமிழ் மொழியும் மேலும் வளம் பெறப் பிறமொழி இலக்கியங்கள், தத்துவ நூல்கள், விஞ்ஞான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெறல் வேண்டும். இன்றைய விஞ்ஞான யுகத்திற்கேற்பத் தமிழிலேயே பல்துறை நூல்கள் வெளிவரவேண்டும் அதற்கு முதலில் மொழிபெயர்ப்புத்துறை வளர வேண்டும். ஏற்கெனவே பல்கலைக்கழகங்களும், சாகித்ய அகாடமி, நேஷனல் புக்டிரஸ்ட், தனியார் பதிப்பகங்களும் பல நல்ல நூல்களை மொழியாக்கம் செய்து உலக இலக்கியப் போக்கின் புதுவரவுகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

நம் நாட்டு மொழிகளில் இலக்கியமும் தத்துவமும் இணைந்தே வளம் பெற்றுள்ளன. மணிமேகலைக் காவியத்தை இலக்கியமாக மட்டுமன்றித் தத்துவ நூலாகவும் காண்கிறோம். சிவஞானபோதம் போன்ற தத்துவ நூல்களிலும் இலக்கிய நயம் காண்கிறோம். இராமாயண மகாபாரதங்களில் இலக்கிய நயம் எவ்வளவு உள்ளனவோ அவ்வளவு தத்துவ ஞான போதனையும் உள்ளன. இம்மரபு இக்காலத்தில் பல துறைவளர்ச்சி மூலம் மாறி வருகிறது. இலக்கியம் வேறு, பிரசாரநோக்க நூல்கள் வேறு என்றாகி விட்டது. பழம் பேரிலக்கியங்களைக் காப்பாற்றவும் புத்திலக் கியத்திற்கு உரமூட்டவும் மொழிபெயர்ப்புத்துறையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலம், வடமொழி, இந்தி மொழி களிலுள்ள பழம்பேரிலக்கியங்கள் தமிழாக்கம் பெற்றதுபோலத் திராவிட மொழிகளில் எட்டாம் நூற்றாண்டிலிருந்து கன்னட இலக்கி யமும் பத்தாம் நூற்றாண்டிலிருந்து தெலுங்கிலக்கியமும் தந்துள்ள வற்றைத் தமிழாக்கம் செய்துதர வேண்டும். தமிழ்ப் பேரிலக்கியங்களில் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சில பேரிலக்கியங்களே தெலுங்கிற்குச் சென்றுள்ளன. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் மட்டுமன்றிச் சங்க நூல்கள் பலவும் கூடத்

தெலுங்கு, கன்னட மொழிகட்குச் செல்லவில்லை. மொழிப் பற்றே மொழி வளர்ச்சிக்கு இடையுறாகிவிடாமல் பிற மொழிகளைக் கற்பதிலும் பிறமொழிச் செல்வங்களைத் தமிழாக்குவதிலும் தமிழ்ச் செல்வங்களைப் பிறமொழிகளில் பரப்புவதிலும் அறிஞர்கள் ஆர்வம் காட்டவேண்டும். சங்க இலக்கியங்களை மக்களிடையே பரப்ப வேண்டும். மதுரைத் தமிழ்ச்சங்கம், தமிழ் இலக்கியப் பெருமையைச் சாதாரண மக்கட்கும் உணர்த்த வேண்டிய பொறுப் பினை உணர்ந்து செந்தமிழ் இதழைப் புதுமெருகுடன் வெளியிட வேண்டும்.

*செந்தமிழ் இதழில் பிறமொழிகளிலுள்ள தொன்மையான* இலக்கியங்களைப் பற்றிய அறிமுகக் கட்டுரைகள் அதிக அளவில் வெளியிட வேண்டும். தமிழில் புதிதாகப் படைக்கப்பட்ட காவியங்கள் குறைவே. பாஞ்சாலங்குறிச்சி வீரசரிதத்தை ஜெகவீர பாண்டியனார் காவியமாக்கினார். அரங்க ஸ்ரீனிவாசன் காந்தி காவியம் படைத்தார். சிலம்புமேகலைக் காவியத் தொடர்ச்சியாக 'மாதவமேகலை' போன்ற சில காவியங்கள் வந்தன. எனினும் பாரதிக்குப் பிறகு சிறந்த காவியப் படைப்பு பிறமொழியாளரும் பாராட்டும் அளவிற்கு எழவில்லை. ஏனெனில் தமிழில் விமரிசனத்துறை வடமொழி போல உருவாக வில்லை. வடமொழி அலங்கார நூல்களின் தமிழாக்கங்களையே யன்றித் தமிழ் மரபு சார்ந்த தொல்காப்பிய உவம இயலையும் இக் காலப் புதிய உத்திகளையும் புரிந்து அணிநூல்கள் படைக்க வேண்டும். பிறமொழிக் *காவிய உத்திகள் தமிழ் மரபுக்கேற்ப* அமைத்துத் தரவேண்டும். நமது தொன்மையான செய்யுள் மரபைக் காப்பாற்றவேண்டும். மரபுக் கவிதைகளில் காவியங்கள் படைத்தல் தொடரவேண்டும். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் ஊக்கம் தர வேண்டும்.

நூற்றாண்டு விழாக்காணும் மதுரைத் தமிழ்ச்சங்கம் "இன்னு மொரு நூற்றாண்டு இரும்" எனச் சான்றோர் வாழ்த்தியதுபோல, இன்னும் ஒரு நூற்றாண்டுக் காலமும் அதற்கு மேலும் *தமிழ்ப் பணி* புரிந்து வளர்தமிழுக்கு மெருகூட்டும் நூல்களை வெளியிட்டுச் சிறப்புற வேண்டும் என்று வாழ்த்துவோமாக. செந்தமிழ் ஈந்த நந்தா விளக்கு என்றும் சுடர் வீசித் திகழுமாக.

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் அ.செல்வமணி | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: ச.மாரியப்பமுரளி M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, ராசராசன் தெரு, மதுரை - 20, செல்:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-9.